## சட்டப் பேரவை விதி எண். 110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 7–5–2008 அன்று பேரவையில் படித்தளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி எண்.110இன் கீழ் பேரவையிலே இந்த அறிக்கையினைப் படிக்க தங்கள் அனுமதி பெற்றுள்ளேன்.

கடந்த சில வாரங்களாக அவை தொடங்கியதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், தங்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற சில விபத்துக்களில் உயிரிழந்தவர்கள், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பலியானவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிக்க வேண்டும் என்று அளித்த விண்ணப்பங்களை அதிகாரிகள் மூலம் பரிசீலித்து, குறிப்பாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்து அவர்களுடைய அறிக்கைகளைக் கேட்டுப் பெற்றதன் அடிப்படையில் நான் இப்பொழுது இங்கே படிக்க இருக்கின்ற பட்டியலின்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. வால்பாறை தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்களுடைய கோரிக்கையை யேற்று – வால்பாறை நீர்வீழ்ச்சி குடியிருப்பு அருகில், நீர்வீழ்ச்சியில் வழுக்கி விழுந்து, தண்ணீர் அடித்துச் சென்று உயிரிழந்த திருமதி வசந்தாமணியின் கணவர் டி. ரவி என்பவருக்கும் – செல்வி கீர்த்தனாவின் தந்தை ஜெயக்குமாருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படுகிறது.

2. உடுமலைப்பேட்டை, சிங்காநல்லூர், பேரூர், மேட்டுப் பாளையம் தொகுதிகளைச் சேர்ந்த அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. சண்முகவேலு, திரு. ஆர். சின்னச்சாமி, திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. ஓ.கே. சின்னராஜ் ஆகியோர் – பில்லூர் அணையில் தோண்டை என்னும் ஆதிவாசிகள் கிராமத்தில் அணையைக் கடக்க பரிசலில் சென்ற போது காளியூர் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பரிசல் கவிழ்ந்ததின் காரணமாக 3–10–2007 அன்று இறந்து விட்டார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும் அளித்த கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அவரது பரிந்துரையை பெற்றதின் அடிப்படையில், ஐந்து பேரில் நீலன் என்பவருக்கு ஏற்கனவே விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்ச ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டு விட்டது போக அந்த விபத்தில் இறந்து போன எஞ்சிய நான்கு நபர்களின் பொருளாதார நிலையைக் கருதி அவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் உதவி நிதி வழங்கப்படும்.

3. கபிலர் மலைத் தொகுதியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நெடுஞ்செழியன் கொடுத்த மனுவில் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பில்லூர் கிராமத்தில் வசித்து வரும் திருமதி பூங்கொடி என்பவரின் பத்து வயது மகன் சஞ்சய், 20–12–2007 அன்று மழையின் காரணமாக திருமணிமுத்தாற்றில் அடித்துச் செல்லப்பட்டதால், கணவனாலும் கைவிடப்பட்ட நிலையில், மகனையும் இழந்த பரிதாப நிலையைக் கருதி, மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரையை ஏற்று, திருமதி பூங்கொடிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் குடும்ப நிவாரண நிதியாக வழங்கப்படும்.

4. குடியாத்தம் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி ஜி. லதா அவர்கள், அவரது தொகுதியைச் சேர்ந்த தாஜ் ஷெரீப் என்ற இஸ்லாமிய இளைஞர் வனத்துறையினரின் மிரட்ட

லுக்கு பயந்து தற்கொலை செய்து கொண்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் உதவி நிதி வழங்க வேண்டுமென்றும் மனு கொடுத்துள்ளார். மறைந்த தாஜ் ஷெரீப் என்பவருடைய குடும்ப நிலையைக் கருதி, அவரது மனைவி சம்சாத் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

5. மதுரை கிழக்குத் தொகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என் நன்மாறன் அவர்களும் மதுரை மேற்கு தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ராஜேந்திரன் அவர்களும் மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 22வது வட்டத்தில் காலரா காரணமாக உயிர் நீத்த 5 வயது சிறுவன் சுரேஷ் குடும்பத்திற்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அவர்களின் கோரிக்கையினையேற்று மறைந்த சிறுவனின் தந்தை திரு. பாண்டிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்படுகிறது.

6. அரூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டில்லிபாபு, அவரது தொகுதியைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவரின் மகன் அமுது இனியவன், மகள் கிருஷ்ணம்மாள் ஆகிய இரண்டு பேரும் 5–5–2007 அன்று பேரையாற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளார். அவரது கோரிக்கையையேற்று, இரண்டு குழந்தைகளின் இழப்புக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் உதவி நிதி வழங்கப்படுகிறது.

7. காங்கேயம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் கொடுத்த மனுவில் காங்கேயம் நகரில் நடைபெற்ற விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தும், 15 பேர் காயமடைந்தும் உள்ளார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி அளித்திட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். அவரது பரிந்துரையையேற்று, உயிரிழந்த மூன்று பேருடைய குடும்பத்தினருக்கும்

தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதமும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் வீதமும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

8. காவேரிப்பட்டணம் தொகுதியைச் சேர்ந்த, பா.ம.க. உறுப்பினர் மேகநாதன் கொடுத்த மனுவில், தனது தொகுதியிலே சென்னப்பன் என்பவரின் மகன் குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு விட்டு, இல்லம் திரும்பும் போது விபத்தில் உயிரிழந்து விட்டதாகவும், அவருடைய மற்றொரு மகனும் கடந்த ஓராண்டிற்கு முன்பு, அதே குடியரசு நாளில் இறந்து விட்டதாகவும், அந்தக் குடும்பத்திற்கு உதவி நிதி அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். அந்தக் குடும்பத்தின் பரிதாப நிலையை எண்ணிப் பார்த்து, ஐம்பதாயிரம் ரூபாய் இழப்பு நிதியாக வழங்கப்படுகிறது.

9. திருத்தணி தொகுதியைச் சேர்ந்த, அ.தி.மு.க. உறுப்பினர் திரு. அரி கொடுத்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் திருத்தணி நகர் ஸ்டாலின் நகர் பகுதியில் 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பலத்த காற்று அடித்த போது, சுவர் இடிந்து மங்கம்மாள் என்பவர் உயிரிழந்து விட்டதாகவும், அவருடைய குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். அவரது பரிந்துரையை ஏற்று, மங்கம்மாளின் வாரிசுதாரரான அவரது மகள் திருமதி கலா என்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

10. குடியாத்தம் தொகுதியைச் சேர்ந்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லதா கொடுத்துள்ள மனுவில் அவரது தொகுதியில் கோபி – ஸ்ரீதேவி ஆகியோரின் இரண்டு குழந்தைகளான சூரியா, சரவணன் ஆகியோர் கல்குவாரியில் தேங்கியுள்ள குட்டையில் 13–4–2008 அன்று விழுந்து இறந்து விட்டதாகவும், அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். அவரது பரிந்துரையையேற்று இரண்டு குழந்தைகளின் இழப்பீட்டுத் தொகையாக தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

**11. அடுத்து நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர்பட்டி கிராமத்தில் மைக்கேல் என்பவரின் 16 வயதான மகன் திலீபன் தாமிரபரணி ஆற்று நீரில் மூழ்கி இறந்து விட்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, மறைந்த திலீபனின் தந்தை மைக்கேலுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் உதவியாக வழங்கப்படும்.**

**வேறு சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைக்காகவும், நிர்வாக நடவடிக்கைக்காகவும் பரிசீலனையிலே உள்ளன என்று அந்த உறுப்பினர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.**

***